# ???????? ???????????? ?????????? ??????????
# ??????? ???????? ??????? ???




## ??????????? ??????




கொனீபா உலகக்கிண்ண தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றிவாய்ப்பை நழுவவிட்ட தமிழீழ அணி இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

சற்று முன்னர் நடைபெற்று முடிந்த இறுதியாட்டயத்தில் 2-1 என்ற கோல்க் கணக்கில் தமிழீழ அணியை வெற்றி கொண்ட சாப்மி அணி சம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

அங்கீகரிக்கப்படாத நாடுகளுக்கிடையில் நடைபெற்று வரும் மகளீர் உலகக்கிண்ண தொடரின் இறுதியாட்டம் ஐரோப்பாவின் கலாச்சார தலைநகரான நோர்வேயில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்று நடைபெறது. இதில் தமிழீழ மகளீர் அணியும் சாப்மி மகளீர் அணியும் மோதின. ஆட்டத்தின் முதல் பாதியில் பந்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த தமிழீழ அணி 1-0 என்ற கோல் கணக்கில் முதல் பாதியில் முன்னிலை வகித்தது.

பின்னர் 2 ஆவது பாதி ஆட்டம் ஆரம்பமானதும் அதில் கிடைத்த பெனால்டி உதை வாய்ப்பை சதகமாக்கிய சாப்மி அணியினர் 1-1 என்ற கோல் கணக்கில் ஆட்டத்தை சமநிலைப்படித்தியதுடன் மேலும் ஆட்ட நேர நிறைவை அண்மிக்க போது கிடைத்த மூலை உதை வாய்ப்பையும் கோலாக மாற்றி 2-1 என்ற கோல்க் கணக்கில் வெற்றியை உறுதி செய்து கொண்டனர்.

சாப்மி இனம் என்பது ஸ்கன்டிநேவியா தீபகற்பத்தின் வடக்கு பகுதியிலும் கோலா தீபகற்பத்தின் பெரும் பகுதியிலுமுள்ள பழங்குடியின் மக்கள் மற்றும் நோர்வே, ரஷ்யா, சுவீடன், பின்லாந்து ஆகியஸ்கன்டிநேவியா நாடுகளில் சிறுபான்மைக்குழுவாக அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இனத்தினிரின் ஒன்று சேர்ந்த அணியே சாப்மி அணியாகும்.



# ??????? ?????????? ?????????? ?????
# ???????? ?????? ??? ????????




கொனீபா மகளீர் உலகக்கிண்ண தொடரின் இறுதியாட்டத்தில் சற்று முன்னர் முதல் பாதி ஆட்ட நேர முடியிவில் 1-0 என்ற கோல் கணக்கில் தமிழீழ அணி முன்னிலையிலுள்ளது.

சாப்மி அணிக்கெதிராக ஆட்டத்தின் ஆரம்பம் முதலே பநதை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த தமிழீழ அணி டிலக்சிக்காவின் அபார கோலுடன் சற்று முன்னர் நிறைவுக்கு வந்த முதல் பாதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

https://youtu.be/rIfKgK4IsHE?si=aId-Qup0XEmJkaUd

---

# ??????? ?????? ?????????? ????????
# ???????????????? ???? ?????? ??????
# ???







கொனீபா மகளீர் உலக்கிண்ண தொடரின் இறுதியாட்டத்திறகு நுழைந்துள்ள தமிழீழ மகளீர் அணி இன்று சனிக்கிழமை (08.06.2024) நடைபெறவுள்ள கிண்ணத்துக்கான இறுதியாட்டத்தில் சாப்மி அணியை எதிர்கொள்கின்றது.

அங்கீகரிக்கப்படாத நாடுகளுக்கிடையில் நடைபெற்று வரும் மகளீர்ர் உலகக்கிண்ண தெடரின் இறுதியாட்டம் ஐரோப்பாவின் கலாச்சார தலைநகரான நோர்வேயில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்று நடைபெறுகின்றது.

இதில் 6 சுற்றுக்கள் நிறையில் இறுதிப் போட்டிக்குள் நழைந்துள்ள தமிழீழ பெண்கள் அணியும் – சாப்மி அணியும் மோதுகின்றன.

சhப்மி இனம் என்பது ஸ்கன்டிநேவியா தீபகற்பத்தின் வடக்கு பகுதியிலும் கோலா தீபகற்பத்தின் பெரும் பகுதியிலுமுள்ள பழங்குடியின் மக்கள் மற்றும் நோர்வே, ரஷ்யா, சுவீடன், பின்லாந்து ஆகியஸ்கன்டிநேவியா நாடுகளில் சிறுபான்மைக்குழுவாக அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இனத்தினிரின் ஒன்று சேர்ந்த அணியே சாப்மி அணியாகும்.

தொடரின் முதல் சுற்று நிலை போட்டிகளில் ஏற்கனவே இரு தடவைகள் மோதியுள்ள இரு அணிகளும் இன்று இறுதிப்போட்டியில் களம் காணுகின்றமை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் உலகமெங்குமுள்ள தமிழர்களின் பார்வையை கொனீபா உலகக்கிண்ணம் நோக்கி திருப்பியுள்ளது.

இந்நிலையில் இன்றைய இறுதியாட்டம் தொடர்பில் தமிழீழ மகளீர் அணியின் தலைவி மற்றும் தலைமைப் பயிற்றுவிப்பாளர் உதவிப் பயிற்றுவிப்பாளர்கள் உடற்பயிற்சி பொறுப்பாளர் அணி முகாமையாளர்கள் நமது ஈழநாட்டுக்கு வழங்கிய நேர்காணல் பின்வருமாறு,

https://youtu.be/CgPBDHPC-8s